

தொல்காப்பியர் விருதும்!
தூயவர் பாராட்டும்!
முதல்வர் கலைஞர்
AKASU ARTS

தொல்காப்பியர் விருதும்!
தூயவர் பாராட்டும்!

முதல்வர் கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு:

திராவிட முன்னேற்றக் கழகம்

"அண்ணா அறிவாலயம்"

367 & 369, அண்ணா சாலை,

சென்னை - 600 018.

முதற்பதிப்பு : செப்டம்பர் 2006.

விலை : ரூ. 5/-

அச்சிட்டோர் : மாருதி பிரஸ்,
174, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

முதல்வர் கலைஞருக்கு
'தொல்காப்பியர் விருது' வழங்கி,
குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் ஆற்றிய உரை

சென்னை, கலைவாணர் அரங்கில் 4.9.2006 திங்கட்கிழமை மாலை ஆழ்வார்கள் ஆய்வு மையம் சார்பில் நடைபெற்ற விழாவில் தொல்காப்பியர் விருதை முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மேதகு இந்திய குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் வழங்கி கௌரவித்து ஆற்றிய உரை.

நான் முதலில் ஒன்றினை சொல்ல விரும்புகிறேன். எனக்கு ''தொல்காப்பியப் பூங்கா'' புத்தகத்தை கலைஞர் அவர்கள் அனுப்பி இருந்தார். அதனை நான் படிக்க ஆரம்பித்தேன். என் நண்பர் கவிஞர் ஒய்.எஸ்.ராஜன் இங்கே இருக்கிறார். அவருக்கும் ஒரு ''தொல்காப்பியப் பூங்கா'' வாங்கி ''நீங்களும் படியுங்கள்'' என்று அவருக்கு அனுப்பினேன்.

அவர் படிக்க ஆரம்பித்தார். நானும் படிக்க ஆரம்பித்தேன். நான் படித்துவிட்டு தொல்காப்பியப் பூங்காவிலிருந்து ஓடி வந்துவிட்டேன். ஆனால் அவர் இன்னும் வர முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார். அந்த நண்பர் ஏன் தத்தளிக்கிறார் என்றால்– நான் பிரமச்சாரி ஓடி வந்துவிட்டேன். (பலத்த சிரிப்பு–கைதட்டல்) நீங்கள் ஏன் வர முடியவில்லை என்று அவரிடம் (எதிரே அமர்ந்திருந்த குடியரசுத் தலைவரின் நண்பர் கவிஞர் ஒய்.எஸ்.ராஜாவை சுட்டிக் காட்டுகிறார்) கேளுங்கள். (பலத்த கைதட்டல்)

முதல் 'தொல்காப்பியர்' விருது பெரும் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களே, ஆழ்வார்கள் ஆய்வு மையத் தலைவர் இராம.வீரப்பன் அவர்களே, நிறுவனச் செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்களே இங்கு கூடியிருக்கும் எல்லா பெரியோர்களுக்கும் என்னுடைய வணக்கம். என்னுடைய வாழ்த்துக்கள்.

இன்று நடக்கும் நிகழ்ச்சி மிகவும் முக்கியம் வாய்ந்தது, இரண்டு காரணங்களுக்காக. ஒன்று இது தொல்காப்பியருக்காக எடுக்கும் விழா. மற்றொன்று, தொல்காப்பியப் பூங்காவுக்குக் கொடுக்கும் பரிசு நாளாகும். தமிழ்நாட்டின் பல இடங்களில் அறுபது வயது முடிந்ததற்கு விழா நடத்துவார்கள். முத்தமிழ் இலக்கியங்களுக்கு அறுபது வருடங்களுக்கு மேலும் பெரியதொரு தொண்டு செய்து கொண்டு இருக்கும் ஒரு பெருங்கலைஞருக்கு 'தொல்காப்பியர்' பெயர் கொண்ட விருது கொடுப்பது அவருக்குத் த'மிழுலகம் செய்யும் ஒரு திருப்பணியாகும். அவர் எழுத்துக்களில் அமைதியால் வரும் கம்பீரச் சிந்தனைகளும், கவிதைக் கருத்து மின்னல்களையும் ஒருங்கே காண முடிகிறது.

ஆறு வருடங்களுக்கு முன்னர் 'இராமானுஜர்' விருது எனக்கு அளித்தபோது என் திருச்சி படிப்பு நாட்களும், டெல்லியின் பல ஆண்டு அனுபவங்களும் சங்கமித்தன. திருச்சியில் திருவரங்கத்துக்குத் தனிப்புகழ் கொடுத்தவர் இராமானுஜர். அவருடைய வாழ்க்கையில் செயலால் செய்து காண்பித்த மானுடமும், எல்லாரிடமும் கடவுளைக் கண்டு வணங்கிச் சமத்துவ நிலைக்குத் தனிப் பெரும் பெருமை கொடுத்ததும் நம் வாழ்வுக்கு ஒரு அருமையான வழிகாட்டியாகும்.

இன்று 'தொல்காப்பியர்' நம் நினைவில் வருகிறார். தொல்காப்பியர், திருவள்ளுவர், சங்கப் புலவர்கள், இளங்கோவடிகள் எனத் தொடங்கிப் பிற்கால ஆழ்வார்கள், நாயன்மார்கள், கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்று பல பெருங்கவிகளால் சிறப்பு செய்யப்பட்டு வளர்ந்து மிளிர்கிறது தமிழ் இலக்கியம். பின்னர், வீரமாமுனிவர், சீறாப் புராணம் செய்த உமறுப் புலவர், பல உரைநடை எழுத்தாளர்கள், சுதந்திரப் போராட்ட எழுச்சிக் கவிஞன் பாரதி, தமிழ் வளர்த்த பாரதிதாசன், அழகுத்தமிழ் நடையைக் கொடுத்த அறிஞர் அண்ணா, இயல், இசை, நாடகம், புத்துலக தமிழ் எழுத்துக்கள், சமூகம், பொருளாதாரம், அறிவியல், என்று பல அறிவுகளைத் தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் பல இலக்கியப் படைப்பாளிகள் பலபேர் என் முன்னே தோன்றுகிறார்கள். இந்த அவையில் கூடப் பல பெரும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், படைப்பாளிகள் அமர்ந்திருப் பதைக் காண்கிறேன். இப்படி வாழையடி வாழையாக வந்த பெரும் அறிஞர்களில் கலைஞர் கருணாநிதி ஒரு பெரும் தமிழ்க் களஞ்சியமாகத் திகழ்கிறார்.

முப்பத்து மூன்று நாட்களில் தொல்காப்பியம் மட்டுமில் லாமல், மற்ற தமிழ் நூல்களில் குளித்து மகிழ்ந்து, இக்காலத் தமிழ் மக்களுக்காக மற்றும் தமிழ் படிக்க நினைக்கும் மற்ற மொழியினருக்கும் எளிதான, இதந்தரும் தமிழில் தொல் காப்பியப் பூங்கா அவர் எழுதியிருப்பது தமிழ் மக்களுக்குச் செய்த ஒரு பெரிய பணியாகும். போற்றுதலுக்குரிய செயலாகும்.

கலைஞர் வடித்த தொல்காப்பியப் பூங்காவில், காப்பியர் ஓர் கனவு கண்டதாகச் சித்தரிக்கிறார். கலைஞர் இங்கே சொன்னார். அதே இடத்திற்கு நானும் போகிறேன். காப்பியரின் கனவில் ஒலி எழுப்பியவாறு எழுத்துக்கள் அணி வகுத்து வீறுநடைபோட்டு

ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முதலெழுத்தும் அவர்முன் நடந்து வந்து வணக்கம் தெரிவித்து விட்டு வரிசையில் நிற்கின்றன.

அ. ஆ. இ. ஈ. உ. ஊ. எ. ஏ. ஐ. ஒ. ஓ. ஔ
என ஒரு முன் வரிசை அமர்ந்தது.
பின் வரிசையில்

க். ங். ச். ஞ். ட். ண். த். ந். ப். ம். ய். ர். ல். வ். ழ். ள். ற். ன் ஆகிய எழுத்துக்கள் அணி வகுத்து நின்றன. இ–க்குக் குற்றியலிகரம் உ–க்குக் குற்றியலுகரமும் கொடுக்கிறார் தொல்காப்பியர். இகரத்திற்கும், உகரத்திற்கும் பெயர் சூட்டுவது மிகவும் அருமையான நிகழ்ச்சியாகும். இதை அழகாக சித்தரிக்கிறார் கலைஞர்.

கலைஞர் எழுத்தில்
தமிழ் என்னும் மெய் இருக்கிறது

தொல்காப்பியர் எவ்வாறு எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பாவை எழுதி முடித்தார் என்பதை எவ்வளவு அழகாகச் சித்தரிக்கிறார் கலைஞர் அவர்கள். அவர் எழுதுகோலில் எந்த மைதான் இருக்கிறதோ? நிச்சயமாகத் தமிழ் என்னும் மெய் இருக்கிறது.

புத்தகம் வெளியானதும், 2003–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே கலைஞர் அவர்கள் எனக்குப் பிரதி அனுப்பி யிருந்தார். படித்து மகிழ்ந்தேன். அந்தப் புத்தகமே ஒரு தமிழ்க் களஞ்சியம். அவருக்கு உடனேயே ஒரு கடிதம் எழுதினேன்.

எனக்கு மிகவும் பிடித்த பகுதி மலர் 93. அன்றே வளர்ந்திருந்த அறிவியல் (பொருளதிகாரம் மரபியல் நூற்பா–27)அதைத்தான் கலைஞர் சொல்கிறார். ஆறு அறிவுகளும் மிகவும் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆறாவது அறிவு குறித்த பகுதி தற்காலத்திற்கும் ஏற்றதாக எழுதப்பட்ட நல்ல செய்தியாகும்.

மீண்டும் நான் தொல்காப்பியப் பூங்கா படித்தேன். இவ்விழாவுக்கு வருமுன்.

நான் படித்து மகிழ்ந்த சில பகுதிகளை உங்களுடன் இப்பொழுது பகிர்ந்து கொள்கிறேன். இந்த அறிவியல் பாகத்தின் முடிவில் பக்கம்–49 "மக்கள் ஆறறி வுடையோ ராவார் ஆறில் ஒன்றிரண்டு குறைவதற்கும், நிலையாக இருப்பதற்கும் இந்த இலக்கணம் பொறுப்பல்ல" என்று முடிக்கும்போது அவருடைய நகைச்சுவை தெரிகிறது. அந்த நகைச்சுவைக்குப் பின்னே இருக்கும் சோகமும் தெரிகிறது. அப்புறம் இன்னொரு 'இன்டரஸ்டிங்'கான இடம் வருகின்றது.

மலர் (17) பக்கம் 129 லிருந்து 133 வரை. 'வடித்து விட்டேன், வந்து விட்டேன்' இல்லறக் கடமையுடன் இலக்கியமும் கற்ற ஒரு பெண்மணி சொல்வது "இதோ சமையல் முடித்து விட்டேன், பரிமாற வந்து விட்டேன், நீங்கள் மூவரும் வந்து சாப்பிடலாம்" கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் கலவையான கொச்சைத் தமிழோ என்று நினைக்கலாம். கணவனும் இலக்கணம் தெரிந்தவன். தன் மனைவியின் இலக்கிய, இலக்கண அறிவை மற்றவரும் பகிர்ந்து மகிழ முயலும் இக்கால இளைஞன் போலும்.

ஆனாலும் மனைவியோ கடமையை முதலில் வைப்பவள். "முதலில் உணவுவேளை முடியட்டும், பிறகு ஆகட்டும்" என்றாள்.

விருந்து முடிந்த பின் தொல்காப்பியர் விருந்து பக்கம் 133 அழகாகச் சொல்கிறார் தொல்காப்பியர்.

"வாராக் காலத்தும், நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம், வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த, பொருள என்மனார், புலவர்
– (சொல்லதிகாரம் – வினையியல் – நூற்பா – 44)"

இது கலைஞருடைய குறிப்பு – வருங்காலம் நிகழ் காலத்தை ஒருங்கிணைத்திடும் நிகழ்ச்சியைக் கடந்த காலக்குறிப்புடன் கூறுதல், விரைவு கருதிக் கூறுவதாகும்”

இதைத்தான் ஆங்கிலத்தில்

“Past meets the present and creates the future” என்று சொல்கிறார்கள்

நான் இப்பாவில் பல விஞ்ஞான உண்மைகளைக் காண் கிறேன். உலகத்தில் உயிர் இயலின் பரிணாம உண்மைகள், புதிய உயிர்கள் படைக்கத் துடிக்கும் மரபணுக்களின் அதாவது (Gene) துடிப்புகளையும் காணலாம்.

மலர் (75) பக்கம் 422 தொல்காப்பியர் சொல்கிறார் ‘‘மருட்கை நான்கே’’ புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம். மருட்கை. மருட்கை என்றால் வியப்பு.

கலைஞர் சொல்கிறார், சந்திர மண்டலம் சென்று ‘புதுமை’ பற்றியும், ‘சிறுமை’ அணுவிலுள்ள சக்தி இரோசிமாவின் அணுகுண்டாக வரும் வியப்பு பற்றியும் எழுதியுள்ளார்.

கலைஞரின் புதிய பதிப்பில் ‘‘சிறுமைக்கு’’, நானோ டெக்னாலஜி ‘NanoTechnology’ உதாரணம் காட்டலாம் என்று நான் நினைக்கிறேன்.

நானோ டெக்னாலஜி என்றால் என்ன? ஒரு மீட்டர் அளவை ஒரு கோடி பாகமாகச் சிறியதாக்கினால் வரும் அளவு ‘நானோ மீட்டர்’. அந்த அளவில் ஒரு சிறு அணுக்களே சேர முடியும். அந்தச் சேர்க்கை பல வியப்பான புதுத் திறமைகள் கொண்ட பொருள்களை உருவாக்குகின்றன. அதைச் சார்ந்த தொழில் நுட்பம் ‘நானோ டெக்னாலஜி. தஞ்சாவூரில் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திலும், சென்னை பல்கலைக் கழகத்திலும் இந்த

ஆராய்ச்சிக்கான மையம் உண்டாக்கியிருக்கிறார்கள். மயிலின் இறகுக்கு அழகு கொடுப்பதே இயற்கை செய்யும் நானோ டெக்னாலஜிதான்.

தமிழை உலகெங்கும் பரப்பிட முயற்சிகளை மேற்கொள்வோம்

இப்படி அறிவு சார்ந்த ஒரு இலக்கியம் படிக்கும்போது ஒரு புத்துணர்ச்சி உண்டாகிறது. இப்பொழுது கலைஞர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

தமிழ் மணம் எல்லோரிடமும், புதிய தலைமுறைகளிடமும் உலகமெல்லாம் சென்று வாழும் தமிழரிடமும், தமிழரில்லா விடிலும் தொன்மையான தமிழ்மொழி பற்றி படிக்க விரும்பும் உலக மக்களிடமும் தமிழ் சேர வேண்டும் என்றால் தமிழை தொழில் நுட்ப வியப்பான (அது ஒரு மருட்கை) இணைய தளத்திலே தமிழ் 'யுனிகோட்' மூலமாக வரைமுறைப்படுத்தி தமிழை இன்டர்நெட் தமிழாக உலகளவும் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்தப் பணி, தமிழக அரசும், தமிழ் கூறும் சான்றோர்களும் இக்காலத்தில் தமிழுக்குச் செய்யும் பெருங்கடமையாகும்.

மேலும் இத்தருணத்தில் சில சிந்தனைகளை உங்கள் உள்ளங்களில் விட்டுச் செல்ல விரும்புகிறேன். இங்கு நடப்பது தொல்காப்பியர் விழா. தொல்காப்பியம் தமிழ் மொழிக்குரிய ஆதி இலக்கண அறிவுக் களஞ்சியமாகும். இது எப்பொழுது தோன்றியது? சிலர் சொல்கிறார்கள், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்றும் மற்றும் சிலர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் இடையில் தோன்றியது என்றும் சொல்கிறார்கள். இந்த இலக்கியங்கள் எப்பொழுது படைக்கப்பட்டன என்பதை ஏன் நாம் அறிய

வேண்டும்? தோன்றிய காலத்தை அறிந்தால், நாட்டின் கலாச்சாரம், மக்களுடைய எண்ணங்களின் நிலைமை, வாழ்க்கை முறை இவற்றையெல்லாம் பற்றி அறிய வாய்ப்புகள் கிடைக்கும். அந்த இலக்கண அறிவுக் காவியங்கள் எவ்வாறு படைக்கப் பட்டன என்பதை அறியக்கூடிய நிலைமை தெளிவாகத் தெரியும். காலம் கடந்து நிற்கும், இந்த இலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சி இந்தக் காலச் சூழ்நிலையிலே மிகவும் அவசியம்.

சென்னைப் பல்கலைக் கழகமும், ஆழ்வார்கள் ஆய்வு மையம் மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் இணைந்து இருபது பி.எச்.டி. ஆராய்ச்சிப் பட்டங்களைத் தொடங்க வேண்டும். இதன்மூலம் அக்கால இலக்கியம் இக்கால சந்ததிக்கு எவ்வாறு பயன்படும் என்று நாம் அறிந்து தெளிய வழிவகை ஏற்படும். அந்தக் கால இலக்கியச் சூழ்நிலை, அன்று வாழ்ந்த மக்களின் ஒற்றுமை உணர்வு, எண்ணங்களின் முதிர்ச்சி, அறிவின் ஒளி இவையெல்லாம் ஒருங்கிணைந்து எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை நாம் அறியலாம். பழங்காலத்தில் உள்ள நல்ல சிந்தனைகளையும் அனுபவங்களையும் நாம் எடுத்து இக்காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பின்னிப் பிணைந்து ஓர் அறிவு சார்ந்த ஒற்றுமையான சமுதாயத்தை வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் நாம் உருவாக்க வேண்டும்.

கடைசியாக நம் இந்திய நாட்டைப் பற்றிய ஒரு கருத்து. நம் நாடு மிக வேகமாக வளர்ந்த நாடாக உருவாக எல்லாத் திறமைகளும், இயற்கை வளங்களும் உள்ளன. அரசியலில் இருப்பவர்கள், பதவியில் இருப்பவர்கள், அறிவு ஜீவிகள், தொழில் நிறுவனர்கள், செய்தி தொழில் நிபுணர்கள் இப்படிப் பலர் தங்கள் முழுத் திறனையும் கொண்டு இளைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தால், வளர்ந்த நாட்டைச் சீக்கிரமே

உருவாக்க முடியும். நல்ல எண்ணங்கள் மட்டுமே நாம் விதைப்போம். நல்ல எண்ணங்களைப் பற்றியே நாம் சிந்திப்போம். நல்ல சமுதாயம் உருவாகும். இதுதான் நாம் இளைய சமுதாயத்திற்கு உருவாக்கித் தரும் சொத்து. இத் தருணத்தில், இந்தத் தொல்காப்பிய பூங்கா நமக்குக் கொடுத்த அறிவுரைகள் நமக்குத் துணை நிற்கின்றன.

தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் – மரபியல் –நூற்பா 109 இல் ஒரு அழகான விடை கண்டேன். (பக்கம் 521 –தொல் காப்பிய பூங்கா) தொல்காப்பியர் எழுத்தைப் பற்றிச் சொல்கிறார்.

“சிதைவு எனப்படுபவை வசை அற நாடின்
கூறியது கூறல், மாறுகொளக் கூறல்,
குன்றக் கூறல், மிகைபடக் கூறல்,
பொருள் இலமொழிதல், மயங்கக் கூறல்,
கேட்போருக்கு இன்னா யாப்பிற்று ஆதல்
பழித்த மொழியான் இழுக்கம் கூறல்
தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனக்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்று விரி ஆகும்”

(பொருளதிகாரம் – மரபியல் –நூற்பா– 109)

இந்த நூற்பாவின் கருத்தாகக் கலைஞர் சொல்கிறார்.

முன்பு கூறியதையே, பின்பும் கூறுவது என்ற கூறியது கூறல், முதலில் ஒன்றைக் கூறி விட்டுப், பிறகு அதற்கு முரணாகக் கூறல், கூற வேண்டியதை, நிறைவாகக் கூறாமல், குறைவாகக் கூறல்,

ஒன்றை, மிகைப்படுத்திக் கூறல்,
பொருளற்ற செய்திகளைக், குறிப்பிடுதல்,

கேட்போரோ, படிப்போரோ, குழப்பமடையுமாறு விளக்குதல்,கேட்போர் செவிக்கு, இனிமை கிட்டாத வண்ணம் சொல்லுதல்,

பெரியோர் பழித்திட்ட சொல்லை; அதன் இழிந்த நிலை கருதாமல் எடுத்தாளுதல்,

நூலின் வாயிலாக, வெளிப்படுத்த, வேண்டிய அறிவுரை பற்றிக் கவலையுறாமல்,

தன் கருத்தை, எப்படியும் புனைந்துரைத்து இடை செருகலாற்றுதல்,

படிப்போரும், கேட்போரும், சுவைத்திட முடியாத, பழுதுற்ற நிலையில் படைத்தளித்தல்

எனப்படும் இந்தப் பத்து குற்றம் குறைகளும் அவற்றின் குட்டிக் குறைகளும் ஒரு நூலுக்குப் பெருமை வழங்கா என்று கலைஞர் சொல்கிறார்.

நான் சொல்கிறேன் அவை வாழ்க்கைக்கும் பெருமை வழங்கா.

இந்தப் பத்து குற்றத்தைப் பேச்சிலும், எழுத்திலும், வாழ்விலும் நீக்கி விட வேண்டும் என்பது என்னுடைய கருத்து, இந்தக் கருத்தை நாட்டிலுள்ள எல்லா மக்களும் கற்று அவற்றைக் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ நான் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் பேசினார்.

11

ஆழ்வார்கள் ஆய்வு மையம் சார்பில் "தொல்காப்பியர் விருது" பெற்ற முதல்வர் கலைஞர் ஆற்றிய ஏற்புரை

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்கள், ஆழ்வார்கள் ஆய்வு மையம் சார்பில் வழங்கிய 'தொல்காப்பியர் விருதினை' பெற்றுக் கொண்டு, முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஏற்புரை:-

சென்னை மாநகரத்தில், தமிழகத்தின் தலைநகரத்தில் என்னுடைய அருமைச் சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களும், ஜெகத்ரட்சகன் அவர்களும் இணைந்து – இன்னும் பல தமிழ் அறிஞர்களும் கூடி நடத்துகின்ற ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் இன்று எனக்குச் செய்துள்ள சிறப்புக்கு என்றென்றும் கடமைப்பட்டவனாக, என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொல்காப்பிய பூங்கா "கோவா"வில் ஒரு மாத காலம் ஒய்வெடுத்துக் கொண்டு படைக்கப்பட்ட ஓர் இலக்கியம். தொல்காப்பியத்தின் பக்கம் போவதற்கே அஞ்சுகிறார்கள் என்கின்ற ஒரு அவச் சொல்லை, எப்படியாவது அகற்றிட வேண்டுமென்பதற்காக நுழைந்துதான் பார்ப்போமே என்று நுழைந்து பார்த்து, வெளியே வந்து ஒரு மாதக் காலத்திற்குப் பிறகு உலகத்திற்கு, தமிழகத்திற்கு எழுத்தாளர்களுக்கு, இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு என்று அனைவருக்கும் நான் உரக்கச் சொன்ன செய்தி தான் – அது ஒன்றும் ஆரண்யம் அல்ல, வனம் அல்ல, காடு அல்ல, நுழைய முடியாத இடம் அல்ல, நுழைந்து இன்பம் அனுபவிக்கக் கூடிய பூங்கா என்பதை அறிவுறுத்துகின்ற வகையிலேதான் தொல்காப்பிய பூங்கா என்று அந்த நூலுக்குப் பெயரிட்டு தமிழகத்திலும், தமிழகம் சார்ந்துள்ள பல்வேறு மாநிலங்களிலும் அதனைப் பரப்புகின்ற பணியிலே நான் ஈடுபட்டேன்.

அதற்கு வாய்த்திருக்கின்ற பெரும் சிறப்பாக இன்றைய தினம் நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களே வந்து, அந்தப் படைப்பினை அளித்த எனக்கு ஆழ்வார் ஆய்வு மையத்தின் சார்பில் வழங்கப்படுகின்ற விருதினை இங்கே அளித்திருக் கின்றார்கள். இதற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னையே நான் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழர்களுக்கும் ஒப்படைத்துக் கொண்டிருக் கிறேனே அதிலேயிருந்து ஒரு துளியும் பின்வாங்க மாட்டேன் என்ற உறுதிமொழியை அளிப்பது தான் நான் வழங்குகின்ற கைமாறாக இருக்க முடியும் (கைதட்டல்) என்பதை இந்த விருதினை வழங்கிய ஆழ்வார் மையத்திற்கும், அதனை என் கரங்களில் தந்த ஏழைகளின், ஏதிலிகளின், எளியோர்களின் நண்பராய், தோழராய், தொண்டராய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தியத் திருநாட்டின் மேதகு குடியரசுத் தலைவருக்கும் உங்கள் முன்னால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விழா நடைபெறுகின்ற இடம் கலைவாணர் அரங்கம். கலைத் துறையில் இலக்கியத் துறையில் நான் இளம்வயது முதலே ஈடுபட்டாலுங்கூட, அதோடு இணைந்து அரசியல் துறையிலும் ஈடுபட்டவன். அரசியல் துறையிலே போராளியாக, மொழிப்போர் வீரனாக, தந்தை பெரியாருடைய மாணவனாக, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பியாக, உங்களுக்கெல்லாம் உடன்பிறப்பாக நான் இருக்கின்றேன். இந்த நிலை என்னுடைய வாழ்வின் இறுதி நாள் வரையில் அதற்குப் பிறகும் தொடர வேண்டுமென்பதுதான் நான் கொண்டுள்ள ஆசையாகும். அதற்கிடையிலே என்னை மேலும் மேலும் ஊக்கப்படுத்துகின்ற வகையில் சகோதரர் ஆர்.எம்.வீ. போன்றவர்கள், ஜெகத்ரட்சகன் போன்றவர்கள் இன்றைக்கு இந்தப் பெரும் முயற்சியை கைக்கொண்டு என்னைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழறிஞர் குழந்தைசாமியின் ஐந்து நிமிட உரையை அற்புத உரையாகக் கருதுகிறேன்

நம்முடைய தமிழறிஞர் குழந்தைசாமி அவர்கள் தனக்கு ஐந்தே நிமிடம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை குறைபட்டுச் சொல்லி, அதற்குள்ளாக உரையை முடித்துக் கொண்டார். எனக்கு அதிலே சகோதரர் ஆர்.எம்.வீ. மீது கொஞ்சம் வருத்தந்தான். தான் எடுத்துக் கொண்ட நேரத்தை, அவர் குழந்தைசாமி அவர்களுக்குக் கொடுத்திருந்தால் தொல்காப்பிய பூங்கா பற்றிய சில கருத்துக்களை அவர் கூறியிருக்கக் கூடும். அடுத்து எழுதுகின்ற தொல்காப்பிய பூங்கா இரண்டாம் பாகத்தில் அதன் அடிப்படையிலே சில கருத்துக்களை நான் எழுதியிருக்கக் கூடும். இருந்தாலும் பரவாயில்லை. அவர் உரையாற்றிய அந்த ஐந்து நிமிடத்தை நான் அற்புதமான நிமிடங்களாகக் கருதி அவர் எனக்கு தக்கதோர் வழிகாட்டியிருக்கிறார், அவரது உரையின் மூலம் என்றும் எடுத்துக் கொள்கிறேன்.

தமிழனுக்குக் கிடைத்த முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்

அவரும் நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்களும், ஜெகத்ரட்சகன் அவர்களும் எடுத்துக்காட்டியதைப் போல தொல்காப்பியம் என்பது வெறும் இலக்கணம் மாத்திரமல்ல, தொல்காப்பியம் என்பது ஒரு இலக்கிய நூல் மாத்திரமல்ல. திருக்குறளுக்கு முந்திய இன்னும் சொல்லப் போனால் அந்தக் காலத்திலே வட மொழி நூல்கள்தான் முதல் நூல்கள் என்று சொல்லப்படுகின்ற கருத்துக்களுக் கெல்லாம் மாறாக தமிழிலே, தமிழனுக்குக் கிடைத்த முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்தான். (கைதட்டல்) அந்தத் தொல்காப்பியத்தை நான் எளிய நடையிலே எல்லோருக்கும் புரிகின்ற வகையிலே வழங்க வேண்டும், தொல்காப்பியம் என்றால் "ஏ, அப்பா, அதையா படிப்பது'' என்று நடுங்குகின்ற இளைஞர்களுக்கு ஒரு துணிவை ஏற்படுத்த வேண்டும்,

எளிமையாக்கித் தர வேண்டும் என்று முயற்சி எடுத்தேன். அந்த முயற்சியிலே நான் வெற்றிப் பெற்றிருப்பதாகவே கருதுகின்றேன். எத்தகைய முயற்சி என்பதற்கு எல்லாவற்றையும் சொல்லி, குடியரசுத் தலைவரின் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே இந்த நூலை நான் தந்து, ஓய்வாகப் படித்திருக்கின்றார். படித்து அதைப் பற்றிய கருத்தையும் எனக்கு எழுதியிருக்கின்றார். உங்களுக்காக ஒன்றிரண்டை மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

உயர்திணை, அஃறிணை என்று இரண்டு திணைகள் உண்டு. இந்த இரண்டு திணையும் பொதுவாக வருகின்ற ஒரு நிலையை தொல்காப்பியர் எடுத்து விளக்குகிறார். அப்படி விளக்கும்போது அவர் அதற்கு புனைந்திருக்கின்ற அந்தப் பா–

"அஃறிணை விரவும் பெயர்
இயல்பு மாருளவே"

(எழுத்ததிகாரம் – தொகை மரபு– நூற்பா :– 13)

இப்போது நான் சொன்னதும், நீங்கள் நினைப்பதும் உண்மையாகவே ஆகும். ஏனென்றால் இந்தப் பாடல் யாருக்கும் புரியாது. இந்தப் பாட்டிலே என்ன புரிகிறது? தமிழ்ப் புலவர்கள் சொல்லலாம், ஆனால் எல்லோரும் சொல்ல முடியாது. இதைத் தான் நான் ஒரு சிறு நிகழ்ச்சி மூலம் விளக்கியிருக்கிறேன்.

ஒரு சிறுவன் ஒரு கிழவியைச் சந்திக்கின்றான். பேருந்து நிலையத்தில் என்று வைத்துக் கொள்வோம்.

"என்னப்பா படிக்கிறாயா?" என்று அந்தக் கிழவி கேட்கிறாள்.

"தமிழ் படிக்கிறேன் பாட்டி. தமிழ் ஆசிரியராக வேலை பார்க்க எனக்கு ஆசை!" என்கிறான்.

"அப்படியா? நல்லது! உன் தமிழ் ஆசான் இலக்கியங்கள் சொல்லித் தருகிறாரா?"

"ஓ! திருக்குறள் –தொல்காப்பியம் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்!"

"அப்படியானால் எனக்கும் கொஞ்சம் இலக்கியம் தெரியும் – நானும் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியைதான் – உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்கிறாயா?" பாட்டி கேட்கிறாள்.

"கேள் பாட்டி; பதில் சொல்கிறேன்!"

"என்னை அழைத்துக் கொண்டு போக இப்போது "சோழன்'' வரும் என்கிறேன். இப்போது சோழன் உயர்திணையா? அஃறிணையா?"

"பாட்டி நீ சொல்லும் சோழன், உன் மகனாகவோ, பேரனாகவோ இருந்தால் உயர்திணை! அல்லது அந்தச் சோழன் பேருந்தாக இருந்தால் அஃறிணை!" என்று பையன் சொல்கிறான். (கைதட்டல்)

"தம்பி; இதை எப்படிச் சொல்கிறாய்? இதற்கு இலக்கணம் என்ன?"

பையன் சொல்கிறான், "பாட்டி; இதோ தொல்காப்பியம் எழுத்ததிகாரம் கூறுகிறது; "அஃறிணை விரவும் பெயர் இயல்பு மாருள வே"

அதாவது இரு திணைக்கும் உரிய பெயரை பொதுப் பெயர் என்பார். அதனால் நான் சொல்வது பொருந்துகிறது. ஆண்பால் உயர்திணையான சோழன் அஃறிணையாவது இப்போது இயல்பு"

உடனே கிழவி சொல்கிறாள். "அன்புப் பேரனே! அன்று ஔவையிடம் ஆற்றலைக் காட்டியதாகக் கூறப்படும் அந்த முருகனைக் காட்டிலும் நீ சிறந்தவன். அவன் தமிழாற்றலை பழத்தில் காட்டினான். (சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று) நீயோ பழந்தமிழ் இலக்கணத்தில் காட்டியுள்ளாய்! வாழ்க! வாழ்க!"

வாழ்த்திக் கொண்டிருக்கும்போதே (நான் கதையை பிறகு முடிக்கிறேன்) சோழன் வந்துவிட்டான்; இல்லை, இல்லை, வந்து விட்டது. (பலத்த சிரிப்பு) இளைஞன் உச்சியில் முத்தமீந்து கிழவி, பேருந்தில் அவன் உதவியுடன் ஏறிக் கொண்டாள். எழுத்ததிகாரம் – தொகை மரபு – நூற்பா 13)

16

அறிவியல் வளர்ச்சிக்கும் அன்றைக்கே தொல்காப்பியம் தூண்டுதலாக இருந்திருக்கிறது

இன்னொன்று, இங்கே உரையாற்றிய சகோதரர் ஆர்.எம்.வீ. குறிப்பிட்டதைப் போல அறிவியல் வளர்ச்சிக்கும் தொல்காப்பியம் அன்றைக்கே தூண்டுதலாக இருந்திருக்கின்றது. அன்றைக்கே அறிவியல், மரபியல் இவைகளைப் பற்றியெல்லாம் தொல்காப்பியம் பேசிக் கொண்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு இது மிகவும் பிடிக்கும் என்பதற்காக இதை மாத்திரம் தனியாக எடுத்து நான் படிக்கிறேன்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுமே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

(மரபியல் – நூற்பா :– 27)

இதன் பொருள் விளக்கம் :–

ஓரறிவுள்ள உயிர் உடம்பினால் அறியக் கூடியது. ஈரறிவுள்ள உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் அறியக் கூடியது. மூவறிவுயிராவது உடம்பினால் – வாயினால் – மூக்கினால் என மூன்றினாலும் அறியக் கூடியது. நாலறிவுயிராவது உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றால் அறியக் கூடியது. ஐயறிவு உயிர் என்பது உடம்பு, வாய், மூக்கு, கண், செவி ஆகியவற்றால் அறியக் கூடியது. இவைகளேயன்னியில் ஆறாவதாக மனத்தினாலே அறியக் கூடியதே ஆறறிவு எனப்படும். இவ்வாறு உயிர்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

என்று இன்று நேற்றல்ல, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய முப்பாட்டகன், பாட்டனுக்குப் பாட்டன் , அந்தத்

தொல்காப்பியன் எழுதுகிறான், அறிவியல் வளர்ச்சியை கூர்ந்து நோக்கி எழுதுகின்றான்.

அது மட்டுமன்றி, ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பெற்றுள்ள உயிரினங்கள் எவை எவை என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகிற பாங்கினை அவன் எழுதிய மரபியல் உணர்த்தும்போது எந்த அளவுக்கு மிகப் பழங்காலத்திலேயே அறிவியல் அடிப்படையில் வாழ்க்கை இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது என்ற மலைப்பு நமக்கு ஏற்படத்தான் செய்கிறது என்று நான் அதிலே குறிப்பு எழுதியிருக்கிறேன்

"புல்லும், மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மரபியல் – நூற்பா :– 28)

எனும் நூற்பா; புல்லும் மரமும் எனும் இருவகைத் தாவரங்களும் உடம்பினால் அறிந்து கொள்ளக் கூடிய ஓரறிவுடைய உயிர்களாகும் என்பதைக் குறிப்பிடுகிறது. "பிறவும்" என இந்த இரண்டிலும் அல்லாத பிற உயிர்கள் என்றும் உணர்த்தப்படுகிறது. அவற்றுக்கும் உடலால் அறிந்து கொள்ளக் கூடிய ஓரறிவுதான்.

உடம்பால் உணர்ந்து கொள்ளக் கூடிய புழுக்கள், புற்கள், மரங்கள், கொடிகள், செடிகள் எனப்படும் ஓரறிவுடைய பட்டியலுக்கு அடுத்து;

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மரபியல் – நூற்பா :– 29)

சங்கு, நத்தை, கிளிஞ்சல் போன்றவை ஈரறிவு உயிர்களாம். தாக்கப்படும்போது அறியும் உணர்வும், இரை கொள்ளுவதால் வாயுணர்வுமென இரு அறிவு கூறப்படும். அடுத்து

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(மரபியல் – நூற்பா :– 30)

ஈசல், எறும்பு, கறையான் இவற்றுக்கும் இவற்றையொத்த பிற உயிர்க்கும் மூவறிவு.

உடலால் வாயால் மூக்கினால் அறியக் கூடிய உயிரினங்கள் இவை.

நண்டும் தும்பியும் நான்கறிவுடையவை எனவும், விலங்குகளும், பறவைகளும் ஐந்தறிவுடையவை எனவும் மரபியல் விளக்குகிறது.

மக்கள் ஆறறிவுடை யோராவர் – ஆறில் ஒன்றிரண்டு குறைவதற்கும், நிலையாக இருப்பதற்கும்; இந்த இலக்கணம் பொறுப்பல்ல! (பலத்த கைதட்டல்)

பூங்காவில் நுழைந்தால் இன்னும் பல மலர்களைப் பறித்து மகிழலாம். நுழைய ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனாலும் நம்முடைய அருமைக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு இன்னும் இரண்டொரு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு அவர்கள் டெல்லி மாநகரம் செல்ல வேண்டும். இதற்கு மேலும் அவர்களை இங்கே காத்திடச் செய்யக்கூடிய, தாமதிக்கச் செய்யக் கூடிய அந்தத் தவற்றை நான் செய்ய விரும்பவில்லை. நம்முடைய சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களுக்கும் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும் ஆழ்வார் மையத்திற்கும் கடமைப்பட்டவன் என்ற முறையிலும் என்னுடைய நன்றியை அவர்களுக்கெல்லாம் ஆயிரம் ஆயிரமாக கோடிகோடியாகக் குவித்து ஊடலுக்குப் பிறகு ஏற்படுகின்ற கூடலுக்கே ஒரு சுவை தான். ஆர்.எம்.வீ. அவர்களுக்கும், எனக்கும் இளமைக் காலத்திலே இருந்த ஊடலுக்கு இன்றையதினம் எவ்வளவு பெரிய நல்விளைவு கிடைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இந்த ஊடலுக்குப் பிறகு ஏற்பட்ட கூடல் தொடரட்டும், தொடரும் என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150வது ஆண்டு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள பல்கலைக் கழகம் பற்றிய பாடலில் "சென்னைப் பல்கலைக் கழகமே, எங்கள் அன்னைப் பல்கலைக் கழகமே" என்று போற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அன்னைப் பல்கலைக் கழகமே என்று நான் சொல்ல இயலாது, காரணம், நம்முடைய நண்பர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டதைப் போல, ஆறாண்டு காலம் இங்கே இந்தப் பல்கலைக் கழகத்திலே பயின்றேன் என்று சொல்லிக் கொண்டதைப் போல, நான் பயின்றேன் என்று சொல்லக் கூட முடியாது, பல்கலைக் கழகத்தில் நுழைந்தேன் என்று சொல்லிக் கொள்ள இயலாதவன் நான். சென்னைப் பல்கலைக் கழகமே, என் அன்னைப் பல்கலைக் கழகமே என்று வைரமுத்து வர்ணிப்பதில் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் உணர்வும் சொல்ல முடியாததாகும். ஏனென்றால் அன்னை என்று அழைக்கும் போது, பல்கலைக் கழகத்தையே ஒரு அன்னை என்று அழைக்கும்போது, பல கல்லூரிகளுக்கு, பல தொடர்புடைய கல்வி நிலையங்களுக்கெல்லாம் பல்கலைக் கழகம் அன்னையாக விளங்குவதை அவர் குறிப்பிட்டது மாத்திரமல்ல, இது கல்விப் பாலை, அறிவுப் பாலை, ஆக்கப் பாலை, முயற்சிப் பாலை, நாட்டை உருவாக்குகின்ற உத்வேகப் பாலை

இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு ஊட்டுகின்ற தாயாக, அன்னையாக இது விளங்குகிறது என்பதற்காகத்தான் அன்னைப் பல்கலைக் கழகம் என்று தம்பி வைரமுத்து குறிப்பிட் டாரென்று கருதுகின்றேன்.

நமக்குக் கிடைத்த பெரும் பேறு

அன்னை என்றால் அறிவு, ஆற்றல், அடக்கமுடைமை, அன்புடைமை, அறநெறி, தயவு, தாட்சண்யம், தாய்மை, பண்பாடு, பரந்த மனப்பான்மை, பாசம், நேசம், பற்று இவை அனைத்தையும் விட நாகரிகம் என இவ்வளவும் பெற்றவர்தான் அன்னையாக (கைதட்டல்) இருக்க முடியும். எனவே இந்தப் பல்கலைக் கழகம் அன்னையாக இருக்கத் தகுதியுடைய பல்கலைக் கழகம்தான் என்பதை இந்தப் பாட்டு வரிகள் நமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் கலந்து கொள்வதும், அவர்கள் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சியிலே நாமெல்லாம் கலந்து கொள்வதும் நமக்குக் கிடைத்த பெரும்பேறு, அரும் வாய்ப்பு என்றே சொல்லலாம்.

அவர்கள் குடியரசுத் தலைவராக ஆற்றி வருகின்ற பணி எத்தகையது என்றால், ஒரேயொரு சான்றின் மூலமாக விளக்க வேண்டுமேயானால், ஒரு விழாவிற்கு வருகிறார் என்றால், அந்த விழாவிற்கு நேரடியாக மேடையிலே வந்து எங்களைப் போல அமர்ந்து விடுகிறவர் அல்ல அவர். இங்கே கூட இந்த விழாவிற்கு வந்த போது எந்த மண்டபத்தை அவர் இன்றைக்கு தொடங்கி வைக்கிறாரோ, எது பழுது பார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக்கிறது என்று அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதோ, அதை முன்கூட்டிச் சென்று

பார்த்து விட்டுத் தான், சரியாகச் செய்திருக்கிறார்களா என்று பார்த்து விட்டுத் தான், அதற்குப் பிறகு அதைப் பாராட்ட வந்திருக்கிறார். (கைதட்டல்)

நமக்கெல்லாம் விழா என்றால் போதும், மாலை என்றால் போதும், மேடை என்றால் போதும், ஒலி பெருக்கி என்றால் போதும், அவர் அப்படி அல்ல, அத்தகைய குடியரசுத் தலைவர் அல்ல அவர், உள்ளபடியே குடியரசுத் தலைவராக அவர் இன்றைக்கு (பலத்த கைதட்டல்) நமக்குக் கிடைத்திருக்கிறார்.

அத்தகையவருடைய அருமையான முன்னிலையில் இந்த இனிய விழா நடைபெறுவது, அதிலே நாமெல்லாம் கலந்து கொள்வது நமக்கு வாய்த்த பெருமை, பேறு என்றே நான் சொல்ல விரும்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150வது ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்றோம் நாமெல்லாம். பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா 1957ஆம் ஆண்டு நடைபெற்ற போது, அன்றைய பிரதமர் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்களும், அன்றைய குடியரசு துணைத் தலைவர், தத்துவ மேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டு அன்றைய விழாவினைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

உலகளவில் புகழ்பெற்ற
உயர்ந்த உன்னதமான பல்கலைக் கழகம்

150வது ஆண்டு தொடக்க விழா கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில் நமது மதிப்பு மிகுந்த மேதகு

குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் வருகை நல்கி, சென்ட் இல்லத்தினைத் திறந்து வைப்பது உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. அது போலவே நம்முடைய மதிப்பிற்குரிய மேதகு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள், மத்தியத் திட்டக்குழு உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர், பல்கலைக் கழக நல்கைக் குழு துணைத் தலைவர், முன்னாள், இந்நாள் துணைவேந்தர்கள், பேராசிரியப் பெருமக்கள், மத்திய, மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள், கல்வியாளர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், மாணவ மாணவியர் முதலான பலரும் ஒருங்கே வருகை தந்து இந்த விழாவினைச் சிறப்பித்திருப்பது கண்டு மிக்கப் பெருமை கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் உலக அளவில் புகழ் பெற்ற உயர்ந்த உன்னதமான பல்கலைக் கழகம். 150 ஆண்டு கால வரலாற்றில் அறிவும், ஆற்றலும், பண்பாட்டுச் செறிவும், சீர்மையும் நிறைந்த ஏறத்தாழ மூன்று கோடி இளைஞர்களை உருவாக்கி உலகுக்கு அளித்துள்ள ஓர் அரியப் பல்கலைக் கழகமாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் வார்ப்புகளாக வடிவெடுத்து, வையம் புகழும் பெருமைகளைக் குவித்துள்ள பெரு மக்களையும், அவர்களை உருவாக்கிட தம்முடைய உழைப்பினை ஈந்த துணைவேந்தர்கள், பேராசிரியப் பெருமக்கள் அனைவரையும் இவ்வேளையில் நினைவுகூர்ந்து போற்றுகிறேன், பாராட்டுகிறேன்.

1839ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ஆம் நாளன்று, அன்றைய சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த லார்டு ஜான் எல்பின்ஸ்டோன் அவர்களிடம், வழக்கறிஞர் ஜார்ஜ் நார்ட்டன் என்பார், அப்போதைய சென்னை வாழ் மக்கள் ஏறத்தாழ 70 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்றினை வழங்கினார். அந்த விண்ணப்பத் தில் நாடு முழுமைக்கும் கல்வி முறை ஒன்றை சென்னை மாகாணத்தில் (Composite State of Madras) செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்நாளில் ஆங்கிலேய இயக்குநர் குழுவின் தலைவராக இருந்த சார்லஸ் உட் என்பார், அந்தக் கோரிக்கை அடிப்படையில் ஆய்வு செய்து, வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த கல்விக் கொள்கை ஒன்றை அப்போது வெளியிட்டார்.

அந்தக் கொள்கை அறிக்கையில்,

1. ஆங்கிலக் கல்வியின் பயன்களை இந்திய மக்கள் பெறுமாறு செய்ய வேண்டும்.

2. இந்தியர்களது அறிவுத் திறன், ஒழுக்கம் ஆகியவற்றை உயர்த்தி, நேர்மையுள்ள அரசு அலுவலர்களாக அவர்களை மாற்ற வேண்டும்.

3. இந்திய மொழிகளை ஆங்கில மொழியுடன் சேர்த்துக் கற்பித்தலுக்குப் பயன்படுத்த வேண்டும். இந்திய மொழிகள் புறக்கணிக்கப் படக்கூடாது.

4. உயர் கல்வி நிலையில் இந்தியப் பண்பாட்டுத் துறைப் பாடங்களைக் கற்க மாணவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.

5. இந்திய மாநிலங்களில் கல்வித் துறைகள் நிறுவப்பட்டு, மேற் பார்வைக்கு பொதுக் கல்வி இயக்குநர்கள் (Director of Public Instructions) நியமிக்கப்பட வேண்டும்.

6. கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற முக்கிய நகரங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் அந்த விண்ணப்பத்திலே கூறப்பட் டிருந்தன. அந்தப் பரிந்துரைகளின் பயனாகத் தான், இந்தியத் திருநாட்டில் 1857 ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்று சொல்லப்படுகிறதே, அந்தச் சிப்பாய் கலகத்தின் போது நாடு முழுவதும் நாட்டு விடுதலைக்கான எழுச்சி ஏற்பட்ட அதே ஆண்டில், சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் 24–1–1857 அன்று முதல் பல்கலைக் கழகமாக இந்தியாவிலே கல்கத்தா பல்கலைக் கழகமும், பின்னர் 18–7–1857 அன்று இரண்டாவது பல்கலைக் கழகமாக பம்பாய் பல்கலைக் கழகமும், பின்பு 5–9–1857 அன்று மூன்றாவது பல்கலைக் கழகமாக நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகமும் (University of Madras) என மூன்று பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன.

எனக்குள்ள பெருமை

இங்கே பேசிய சிலர் குறிப்பிட்டதைப் போல இங்கிலாந்து நாட்டில் அமைந்துள்ள இலண்டன் பல்கலைக் கழகத்தை முன்னோடியாகக் கொண்டு நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் தான் சென்னைப் பல்கலைக் கழகமாகும். அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்லவேண்டுமேயானால் இந்தப்

பல்கலைக் கழகத்தின் வளாகம் அமைந்துள்ள இடம் சேப்பாக்கம். என்னுடைய தொகுதி. (பலத்த கைதட்டல்) உங்களுக்கு ஒரு முதல் அமைச்சரைத் தந்த தொகுதி சேப்பாக்கம். இந்தச் சேப்பாக்கத்தில் தான் இந்தப் பல்கலைக் கழகமும் அமைந்திருக்கின்றது. அது பல்கலைக் கழகத்திற்கு உள்ள பெருமையல்ல, எனக்குள்ள பெருமை என்று சொல்லிக் கொள்கிறேன். (கைதட்டல்)

இங்கே நம்முடைய துணைவேந்தர் குறிப்பிட்டதைப் போல், தமிழ்நாடு சட்டப் பேரவையில் 22.7.2006 அன்று வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில்

"சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150வது ஆண்டு விழா நடைபெறவிருப்பதை யொட்டி, சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலேயே திராவிட இயக்க ஆய்வு மையம் (Centre for Research on Dravidian Movement) ஒன்றினை நிறுவிட இந்த அரசு முடிவெடுத்துள்ளது" என்று அறிவிக்கப்பட்டது

அந்த திராவிட இயக்க ஆய்வு மையம் நிறுவப்பட வேண்டியதன் அவசியத்தை எண்ணும்பொழுது தமிழகத்தில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய அரசியல் சமூக பொருளாதார சூழ்நிலைகளையும், அவற்றின் விளைவாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சந்தித்த பிரச்சினைகளையும் இன்னமும் நாம் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில ஆதிக்க சக்திகளால் மற்றவர்கள் குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தைச்

சார்ந்தவர்கள் உத்தியோகத் துறையிலே புறக்கணிக்கப் பட்டனர். கல்வித் துறையிலே புறக்கணிக்கப்பட்டார்கள். தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால் மனம் புழுங்கிக் கிடந்தனர். அந்த நிலைமை கண்டு பொங்கி எழுந்தவர்களில் ஒருவர் தான் இந்தப் பகுதியிலே, சேப்பாக்கம் பகுதியிலே அன்றைக்குப் பிறந்து வளர்ந்த டாக்டர் நடேசனார், அவருக்கு உற்றத் தோழராக பிட்டி தியாகராயர், அவர்களுக்கு துணையாக டாக்டர் டி.எம். நாயர் – இந்த மூவரும் கூடிப் பேசி இங்கே தான் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த இளைஞர்களின் கல்வி வளர்ச்சியைக் கருதி 1912 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மெட்ராஸ் யுனைடெட் லீக் (Madras United League) என்னும் அமைப்பை நிறுவி 1913 ஆம் ஆண்டு அதற்கு திராவிடர் சங்கம் (Dravidian Association) எனப் பெயரையும் மாற்றினார்கள்.

தமிழக வரலாற்றில் 1916 முக்கியமான ஆண்டு

அந்த சங்கம்தான், 1916 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாள் அன்று தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் புதிய அரசியல் கட்சியாக உருவெடுத்தது. பின்னர் நீதிக் கட்சி என வரலாற்றில் நின்று நிலைத்துவிட்டு, அதன் பின்னர் தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக பெயர் மாற்றம் பெற்று, பிட்டி. தியாகராயர் அவர்கள் நீதிக் கட்சியின் கொள்கையையும், குறிக்கோளையும் அறிவிக்கும் ஆதிக்க இனங்கள் எது என்பதையும் தன்னுடைய இனம் தாழ்த்தப்பட்டிருக்கிறது என்பதையும், அந்த இனம் தாழ்த்தப்பட்டிருந்தாலும் மறுபடியும்

தடைகளை உடைத்துக் கொண்டு, முன்னேற முடியுமென்ற தன்னம்பிக்கையையும் 1916இல் அறிவித்தார். இதைப் பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார்: இது முரசொலி மாறன் எழுதிய "திராவிட இயக்க வரலாறு" எனும் நூலில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. எனவே 1916ஆம் ஆண்டு தமிழக வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டு.

திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய டாக்டர் டி.எம். நாயர் அவர்கள் ஏழை, எளிய நலிந்த சமுதாயத்தினர் குறிப்பாக மாணவர்கள், அரசு ஊழியர்கள் துணிவு பெற வேண்டுமென்றும், தங்கள் குறைபாடு களைத் தைரியத்துடன் எடுத்து வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி,

"விழியுங்கள், எழுங்கள், இன்றேல் என்றும் நீவீர் வீழ்ந்துபட்டோராவீர்" என்ற இந்த மூன்று "ஸ்லோகங்" களை அன்றைக்குச் சொன்னார்.

"Awake, arise or be forever fallen"

என்று எழுச்சியுடன் டாக்டர் நாயர் உரையாற்றினார். அது தான் திராவிட இயக்க சரித்திரத்தின் முன்னோடி சிறப்புப் பாயிரம். அத்தகைய எழுச்சிமிக்க உரைகள், செய்தி ஏடுகள், இடைவிடாத கருத்து விளக்கங்கள் போன்றவற்றின் பயனாக, ஜஸ்டிஸ் கட்சி 1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதல் மந்திரி சபையை அமைத்தது. தியாகராயரின் ஆலோசனையின்படி, சுப்பராயலு ரெட்டியார் முதலமைச்சரானார்.

1923ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலிலும் நீதிக் கட்சியே வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. 1923ஆம் ஆண்டில் நீதிக்கட்சி அரசு நடைபெற்ற போது, சென்னைப் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டம் (Madras University Act,1923) இயற்றப்பட்டு, அது தான் இன்றளவும் உறுதி வாய்ந்த சட்டமாக நீடித்துக் கொண்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தின் மூலம்தான் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி பெறுவதற்கும், ஆசிரியர்களாக நியமனங்கள் பெறுவதற்கும் அதற்குப் பிறகுதான் வழியே பிறந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதன்பின், 1926 ஆம் ஆண்டில் டாக்டர் சுப்பராயன் தலைமையில் அமைந்த மந்திரி சபையில் இடம் பெற்றிருந்த முத்தையா முதலியார் அவர்களால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (Communal G.O.) என்ற சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில் அதன் வாயிலாக பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட இளைஞர்கள் பெரும் வாய்ப்புகளை வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் பெற்றார்கள். ஆனால் இதை நீண்ட நாள் அனுபவிக்க முடியவில்லை. இன்றைக்கு விவாதிக்கப் படுகின்ற மத்திய அரசு கல்வி நிலையங்களில் பிற்படுத்தப் பட்டோருக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு தொடர்பான சட்டமுன்வடிவு பற்றி விவாதிக்கிறோமே, இது அன்றைக்கு கம்யூனல் ஜி.ஓ. என்ற பெயரால் உருவாக்கப்பட்ட சட்டத்தின் தாக்கமாகும்.

நாடு சுதந்திரம் அடைந்த பின், 1950ஆம் ஆண்டு பண்டித நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலக் கட்டத்தில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த போது வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டத்திற்கு ஒரு ஆபத்து ஏற்பட்டது.

திராவிட இயக்கத்தின் குறிக்கோள்

அந்தச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு மாறாக, முரணாக இருப்பதாக ஆதிக்கக் காரர்களால் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப் பட்டு, அந்த வழக்கில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் பெற்று வந்த அத்தனை சலுகைகளும் பறிக்கப் பட்டன.

சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து தமிழகம் முழுவதும் 1950 முதல் பெரும் போராட்டம் வெடித்தது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கர்ம வீரர் காமராஜர் அத்தனை பேரும் அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தார்கள். அது கண்டு, இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் காமராஜரை டெல்லிக்கு அழைத்து அவரோடு பேசி தமிழகத்தின் நிலையை உணர்ந்து இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார். அந்தத் திருத்தத்தின்படி தான் இனிமேல் மாணவர்களானாலும், வேலை வாய்ப்புக்குச் செல்பவர்களானாலும் அவர்கள் எல்லாம் socially and educationally backwardஆக இருந்தால், அவர்களுக்கு ரிசர்வேஷன் உண்டு என்ற ஒரு கொள்கை அன்றைக்குத் தான் கடைப்பிடிக்கப்பட்டது. இது இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு பகுதியிலே தமிழகத்திலே

நடைபெற்ற பெரும் கிளர்ச்சியின் காரணமாக ஒரு இடத்தில் வட பகுதியிலே டெல்லியிலே மின்னிய மின்னல், அந்த மின்னல் இந்த ஐம்பதாண்டு காலத்திற்குப் பின்பு இந்தியா முழுமையும் ஒளி மயமாக ஆக வேண்டும் என்பதுதான், இந்தியா முழுமையும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆக வேண்டும் என்பது தான் அன்றைக்கு இங்கே உருவான திராவிட இயக்கத்தினுடைய அந்தக் கொள்கை, அந்த இலட்சியம், அந்தக் குறிக்கோள். அதை நிறை வேற்றுவதற்கு உரியவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்கள் இந்தக் கொள்கையிலே எவ்வளவு அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்பதை நான் அறிவேன். (கைதட்டல்) பாரதப் போரிலே விடாப்பிடியாக நின்று ஜெயித்தவன் அர்ஜுனன் என்று படித்திருக்கிறோம். (கைதட்டல்) எனவே இந்த அர்ஜுனரும் இந்தப் போரிலே நிச்சயமாக வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கின்றது. அந்த அர்ஜுனருக்கு கண்ணன் எப்படி உதவியாக இருந்தானோ அதைப் போல நாமும் உதவியாக இருப்போம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்து இந்த இனிய விழாவிலே நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களும் மற்ற பெருமக்களும் கலந்து கொண்டமைக்காக தமிழகத்தின் முதல் அமைச்சர் என்ற முறையில் நன்றியும் பாராட்டும் வாழ்த்தும் கூறி இந்த அளவில் என் உரையை நிறைவுசெய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.